## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 286/2009

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 22.06.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சிற்றம்பலம் Father's Name : சுப்பு உடையார்

துவக்க நேரம்:04.12P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

1. 6-ஆம் பிரதிவாதியின் மனைவி மற்றும் மகள் ஆகிய இருவரும் வா.சா.ஆ-1 மற்றும் 2-ஐ ஆட்சேபனை செய்து தாவா சொத்து அவர்களுக்கு உரிமையானது என்று கோரி தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை, ஆனால் தாவா சொத்து 3-ஆம் பிரதிவாதிக்குதான் சொத்து சொந்தம் என்று வேறு ஒரு வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு சாட்சியம் அளித்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு சாட்சியம் அளித்த வழக்கின் வழக்கு எண் தெரியுமா என்றால் இந்த வழக்கில்தான் அவ்வாறு சாட்சியம் அளித்துள்ளார்.

2. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை, முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் தாவா சொத்து 1-ஆம் பிரதிவாதிக்கு சுயராஜ்யமாக பாத்தியப்பட்டது

என்று கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்தவிதமான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றாலும், அவ்வாறு இருந்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அதேபோல் 20.01.2005 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலும் குறிப்பிட்டிருப்பார்கள் என்றாலும் சரியல்ல.

3. பி.வா.சா.ஆ.2 ஆன 17.07.2009 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் என்ன காரணத்திற்காக தான செட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த பத்திரத்தை எனது தாயார் விருப்பப்பட்டு எழுதவில்லை, வாதியின் பெரியப்பா தங்கராசு மற்றும் சின்னு உடையார் ஆகியோர்கள் எனது தாயாரை இழுத்து சென்று அவ்வாறு எழுதி வாங்கிவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு கட்டாயப்படுத்தி எழுதியிருந்தால் அதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

4. எனது தம்பி நடராஜனின் மனைவி ராணி, எனது மகன் மகேந்திரனுக்கு ஒரு பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் 18.04.2002 அன்று எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விடுதலைப்பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதியின் அனுபவ சுவாதீனத்தில் இடையூறு செய்ததாக கூறி வீரகனூர் காவல் நிலையத்தில் என் மீது Crl.No.163/2017 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், மேலும் 2 வழக்குகளும் என் மகன் மற்றும் மகள் மீது பதிவு செய்தார்கள்.

5. வாதி தரப்பு சான்றாவங்ணங்களான 1 மற்றும் 2 ஆவணங்களின் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களை ஒப்படைக்க தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன். அ.வ.எண்.205/2009-

ன் வழக்குரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ-1 முதல் 4 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரயம் வாங்கிய தேதியிலிருந்து வாதிதான் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும், வாதியின் அனுபவ சுவாதீனத்தை இடையூறு செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தாயார் என் மகனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த தேதியிலிருந்து நாங்கள்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறோம், வாதி சுவாதீனத்தில் எப்பொழுதும் இருந்ததில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், நான் துபாயில் வேலை செய்து வந்தேன் என்றாலும், எனது மகன் சென்னையில் இருந்து வருகிறார் என்றாலும், தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் நாங்கள் எப்பொழுதும் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல. வாதியின் வழக்கு அவர் கோரியபடி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்து கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை.

முடிவு நேரம்: 04.40P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. JansiRani,
Additional District Munsif, Attur.

Typed by Tmt.L.Kalaiselvi - O.S. No.286/2009, Dt.22.06.2026.